மீரா

சந்திரபிரபா தயாரிப்பு — —

நாராயணன் கம்பெனி விநியோகம்

நடிகர்கள்

***

எம். எஸ். சுப்புலக்ஷ்மி	....	மீரா
குழந்தை ராதா	....	பால மீரா
சித்தூர் வி. நாகய்யா	....	ராணு
செருகளத்தூர் சாமா	....	ரூபகோஸ்வாமி
கே. சாரங்கபாணி	....	உத்தம்
டி. எஸ். பாலையா	....	விக்ரம்
எம். ஜி. ராமச்சந்திரன்	....	ஜயமல்
கே. ஆர். செல்லம்	....	உதா
டி. எஸ். துரைராஜ்	....	நரேந்திரன்
ஆர். சந்தானம்	....	சுரேந்திரன்
கே. துரைசாமி	.....	தூதாராவ்

பேபி கமலா, ஜெயகௌரி, லீலா முதலியோர்

பாபநாசம் சிவன்	....	பாட்டு
எஸ். வி. வெங்கட்ராமன்	....	சங்கீத டைரக்ஷன்
கே. வி. நாயுடு & பார்ட்டி	....	சங்கீத கோஷ்டி
வழுவூர் ராமய்யா பிள்ளை	....	நடன டைரக்ஷன்

நியூடோன் ஸ்டூடியோ

டைரக்ஷன்: எல்லிஸ் ஆர். டங்கன்

ஆர்ட் டைரக்ஷன்:
ஸ்ரீ கனு தேசாய், பாபுபாய் மேஸ்த்திரி

ஒளிப்பதிவு:
ஜிதன் பானர்ஜி

ஒலிப்பதிவு:
தின்ஷா கே. தெஹ்ரானி

***

சந்திர பிரபா தயாரிப்பு

நாராயணன் கம்பெனி ரிலீஸ்

Kanags

M. K. PONNIAH PILLA
NEWS AGENT & BOOKSELLER
101 NORRIS ROAD,
COLOMBO.

மீரா

கதைச் சுருக்கம்

குழந்தை மீரா வளர்ந்த வீட்டுக்கு, கண்ணன் பிறந்த புண்ணிய தினத்தில் மகான் ரூபகோஸ்வாமி வருகிறார். அவர் கொண்டு வந்த கிருஷ்ண விக்ரகம் குழந்தையின் உள்ளத்தைக் கொள்ளை கொள்கிறது. பால மீரா, நந்தபாலனையே தன் மணாளனாக வரித்து மாலையிடுகிறாள்.

Kanags

மீரா யௌவனப் பிராயத்தை அடைந்தபோது, பாட்டனாரின் விருப்பத்துக்கு இணங்கி மேவார் ராணாவை மணந்து சித்தூர் செல்கிறாள். சித்தூர் அரண்மனையின் அழகிய உத்தியான வனங்களில் உலாவும்போது, மீராவின் உள்ளம் 'நிலா மலர்ந்த இரவினில் தென்றல் உலாவிடும் நதியில்' நின்று குழலூதிய 'நீல நிறத்துப் பாலகனை' எண்ணி எண்ணி உருகுகிறது.

ஆரம்பத்தில் மேவார் ராணா தான் கைப்பிடித்த தர்ம பத்தினியின் கிருஷ்ண பக்தியையும் அவள் பாடிய கீதங்களையும் குறித்துப் பெருமையும் மகிழ்ச்சியும் கொள்கிறான். போகப் போக, அவனுக்குச் சலிப்பு உண்டாகிறது. ராணாவின் சகோதரி உதாவும் சகோதரன் விக்ரமனும் மீராவைக் குறித்து அவனிடம் புகார் செய்து கோப மூட்டி வருகிறார்கள். விஜயதசமியன்று நடந்த தர்பாருக்கு மீரா வருவதாக வாக்களிக்கிறாள். ஆனால் தர்பாருக்குப் புறப்படும் போது கண்ணன் வேய்ங்குழலின் நாதம் அவளைக் கவர்ந்திழுக்கச் சபா மண்டபத்துக்குப் போவதற்குப் பதிலாகக் கோயிலுக்குப் போகிறாள். ராணா அளவுமீறிய கோபங்கொண்டு கோயிலுக்குச் சென்று மீராவை நிந்தித்து விட்டு வேட்டைக்குச் செல்கிறான்.

விக்கிரமனுடைய தூண்டுதலின் பேரில் உதா மீராவுக்கு விஷம் கொடுத்துவிட்டுப் பிறகு வருந்துகிறாள். பாம்பின் தலைமீது நடனமாடிய பகவானது அருளால் மீராவுக்குத் தீங்குநேராததைக் காண்கிறாள். உதாவின் மனம் மாறுகிறது.

டில்லி பாதுஷாவின் சபையிலிருந்து தான்ஸேன், மான்ஸிங் என்னும் இருவர் மீராவின் தெய்வீகக் கீதங்களைக் கேட்க ஆவல் கொண்டு மாறு வேடம் பூண்டு வருகிறார்கள். இரவெல்லாம் கோ

யிலில் மெய்ம்மறந்து இருந்தபிறகு அவர்கள் பாதுஷா அளித்த முத்துமாலையை மீராவிடம் சமர்ப்பித்து விட்டுக் கிளம்புகிறார்கள்.

காட்டிலிருந்து ராணு திரும்பி வந்ததும் விக்கிரமனும் தளபதி ஜயமல்லும் முத்துமாலையைக் காட்டி ராணுவுக்குத் தூபம் போடுகிறார்கள்.

"அது இனிமேல் கோயில் அல்ல. பதிதர்களின் சதி மண்டபம். பீரங்கி வைத்து இடித்துத் தள்ளுங்கள்" என்று ராணு உத்தரவு இடுகிறான்.

ஆலயத்தை இடிக்க உத்தரவிட்டது ராணுதான் என்று தெரிந்ததும் மீரா, 'அரண்மனை வாழ்வும் அரச போகமும் தனக்கு உகந்தவை அல்ல' என்று தீர்மானிக்கிறாள். தம்புராவையே துணையாகக் கொண்டு சித்தூரை விட்டுப் பிருந்தாவனம் செல்கிறாள். அங்கிருந்து ரூபகோஸ்வாமியுடன் துவாரகாபுரிக்குப் போகிறாள். வெகு காலமாக மூடிக் கிடந்த துவாரகா நாதனின் சந்நிதிக் கதவைத் திறந்து தரிசனம் அருள வேண்டுமென்று கதறுகிறாள்.

ஆலயக் கதவு திறக்கிறது; அடியாள் மீரா பரந்தாமனுடைய பாத கமலத்தில் ஐக்யமாகிறாள்.

Kanags

SYNOPSIS

On Gokulashtami day Saint Rupagoswami visits the home of child Meera. The idol of Krishna brought by him captivates the heart of the child. Her devotion to the idol grows with time. She feels that the Lord is her husband.

When Meera attains the age of marriage, her grand-father Dooda Rao persuades her to marry the Rana of Mewar.

The thought of the 'blue-coloured boy who plays on the bamboo flute in the moonlit night on the banks of Jumna' haunts Meera frequently in her lonely walks in the beautiful gardens of the Chitore palace.

In the early days of married life, the Rana feels proud of Meera. He admires her devotion and her divine music. He builds a temple for her worship. But as days pass by, he gets fed up with her ways of life, His sister Uda and his villainous brother Vikram provoke his wrath against Meera.

(Continued on page 12)

பால மீரா

நந்த பாலா என் மணாளா
இங்கு வாராய் கிரிதாரி

இந்த மாலை நீ சூடி அன்பு கூடி
விளையாட இங்கு வாராய் என்னைப்
பாராய் கிரிதாரி—நந்தபாலா

மீரா

முரளீ மோகனா—கருணைலய ஸுந்தரா
அபலை என்னையே—அறியாப் பருவந்தன்னில்
அடிமை நீ கொண்டதை—அன்றே மறந்தாயோ
உன்னையல்லால் இன்பம் உண்டோ கிரிதாரி

ராணா

இந்தப் பாரிலில்லை எனக்கிணையே
மங்கை மீரா வாழ்விலென் துணையே

கான கலையில் நிகரில் யுவதி
கண்ணனடியை மறவா குணநிதி
மங்கை எனையே மாலையிடவே
மன்னரில் நானொரு பாக்கியசாலி

Kanags

மீரா

காற்றினிலே வரும் கீதம்
கண்கள் பனித்திடப் பொங்கும் கீதம்
கல்லும் கனியும் கீதம்
பட்டமரங்கள் தளிர்க்கும் கீதம் பண்ணெலி கொஞ்சிடும் கீதம்
காட்டு விலங்கும் கேட்டே மயங்கும் மதுரமோஹன கீதம்
நெஞ்சினில்இன்பக்கனலை எழுப்பி நினைவழிக்கும் கீதம் (கா)

சுனை வண்டுடன் சோலைக்குயிலும் மனங்குவிந்திடவும்
வானவெளிதனில் தாராகணங்கள் தயங்கி நின்றிடவும்
ஆ! என்சொல்வேன்! மாயப்பிள்ளை வேய்ங்குழல் பொழிகீதம்(கா

நிலா மலர்ந்த இரவினில் தென்றல் உலாவிடும் நதியில்
நீல நிறத்துப் பாலகன் ஒருவன் குழல் ஊதி நின்றான்
காலமெல்லாம் அவன் காதலை எண்ணி உருகுமோ என் உள்ளம்

மீரா

எனது உள்ளமே—நிறைந்ததின்ப வெள்ளமே
யது வீரனே நந்தகுமாரனே நினைந்து

மலரே இருவிழி பங்கஜமலரே திருமுகமும்
மலரே இருகரம் தாமரை மலரே திருவடிகள்
மந்த ஹாசமுந் தவழ்ந்த
ஸுந்தர முகாரவிந்தம்/நினைந்து (எனது)

அன்னை தந்தை பதியுமவன்
அருந்துணை நவ நிதியுமவன்
இன்பமும் அழகும் அவனே
எழில்தரு மணி பணி அவனே
மீராப்ரபு கிரிதர கோபாலனே
வரதனே நினை தொறும் (எனது)

ராணு: விண்ணும் மண்ணும் நிறைந்த உன் கண்ணன்
விக்ரஹ மொன்றில் அடங்கினனே
பொன்னில் மணியில் கனியில் மலரில்
இயற்கை அழகில் விளங்கானே

மீரா: ஆருயிர் யாவும் அவனுலே
சேரும் ஆருத இன்பமே
பொன்னும் மணியும் கனியும் மலரும்
கண்ணனருள் வெள்ளத் திவலையே

ராணு: இந்த தெய்வீக அன்பினுலே
எந்தன் நேயம் மறந்தாய் போலும்

மீரா: உங்களன்பும் எந்தன் பிரேமையும்
ஒன்று சேருமே கண்ணன் தாளில்

இருவரும்: தென்றல் வீசிடும் இன்ப மாலை
ஜீவராசிகள் மகிழும் சோலை
என்று மில்லாத எழில் மிகுந்து
இனிமை ததும்பும் இன்னுளே

Kanags

மீரா

கிரிதர கோபாலா—பாலா (கிரிதர)
ச்யாமள சரீர கௌஸ்துப ஹார
பீதாம்பரதர ப்ரபோ முராரே (கிரிதர)
நந்த ஸுகுமார மன மோஹன கார
பிருந்தாவன சர துளஸீ ஹாரா (கிரிதர)
கிரிதர கோபால கம்ஸ விதார
மீரா மானஸ ஸரோ விஹார (கிரிதர)

மீராவும் அடியார்களும்

யது நந்தன கோபாலா
ஜய பிருந்தாவன லோல
ஜய தீன வத்ஸலா
ஜய வேணு கான லோல
வரதா—அருள் தருவாய்—வனமாலி
ஜய மீரா பிரபு கிரிதாரி

லீலைகள் செய்வானே—கண்ணன்
மாயைகள் புரிவானே
லீலைகள் செய்வான் பாலகோபாலன்
நீல முகில் மணிவண்ணன்

கானக மடுவில் காளியன் தலையில்
கள நடம் புரியும் பாதன்
வானவர் வாழ மானில மீது
ஆனிரை மேய்த்த என் நாதன்

பீதாம்பர துளஸீ வனமாலை
நவமணி ஹாரமும் மின்ன
ராதா ரமணன் மீரா இறைவன்
யமுனை தீரந்தன்னில்

ஆயர் மனைதனில் வெண்ணெய் திருடுவான்
அகமும் கவர்ந்திடுவானே
மாயப் புன்னகை செய்து மயக்கும்
மீராவின் பிரபுதானே

Kanags

பிரேம நதியின் தீர மதினில்
மீராப் பிரபுவும் வருவான்
திரு முக மதினில் குறுநகை மலர
அகமும் புறமும் நிறைவான்

என்னிரு கண்ணும் கண்வளர் ஒளியும்
கண்மணியும் மலர்க் கண்ணன்
என்னுடல் பொருளும் உயிரும் ஆருயிர்
நாயகனும் மணிவண்ணன்

வானமளந்தான் தாளை நினைந்தால்
மாயவினை அகலாதோ?
கனி இதழ் ஊறும் குழலிசை கேட்டால்
கல் மனமும் கரையாதோ?

மாலினைக் காண மாமுனி வோர்கள்
பாற்கடல் தேடியே வந்தார்
ஆலிலை மேலே துயில்கொளும் அமுதைக்
காண்கிலம் என்று வியந்தார்

சங்கரன் வந்தான் இந்திரன் வந்தான்
சந்திர சூரியர் வந்தார்
அங்கு மிங்குமாய் ஐயனைத்தேடி
ஆயர்மனைதனில் கண்டார்

மீரா ஹ்ருதயம் கோவில் கொண்டான்
மீளா அடிமை கொண்டான்
மாறி மாறி வரும் பிறவிகள் தனிலும்
மாறுப் பிரேமை தந்தான்

மீரா

ஹே ஹரே தயாளா
என்னுயிர்க்கினிய மணவாளா
வேய்ங்குழலின் நாதம் காதிலே
ஆரமுதம் போலே பாயுதே

Kanags

சன்னிதி தன்னை நான் அகலேனே கருணை சாகரா!
என்னை வலிய வந்தாளும் இறைவா
கண்ணே! என் ஜீவேச்வரா!
என்-உடையவா உன்-அடிமையான் கை-விடுவையோ

தாமரைப் பாதனே—தேவகி மைந்தனே
மீராப்ரபு—தீரா ஜய
தூயனே! மாயனே!
துவாரகா நாதனே! ஹே ப்ரபோ!.....

மீரா

மறவேனே என் நாளிலுமே
கிரிதாரி உனதருளே

நஞ்சை நீ உண்டனையோ—இந்தப்
பஞ்சையைக் காத்தனையோ—ஒரு
விஞ்சை புரிந்தனையோ (மறவேனே

மீராப்ரபு கிரிதாரி—ஜய
மீராப்ரபு கிரிதாரி

Kanags

மீரா

சராசரம் உன்னை யாவும் தேடுமே
மறைகளும் மகிழ்ந்துன்னைப் பாடுமே—ஹே பிரபோ
நிராசையால்நைந்த என் நெஞ்சமும்
பராவும் உன் பாதார விந்தமே

உனையே எனதுயிர்த்துணை என்று
உவந்ததென் தவறே ஜயா

கனவிலும் உன்னையன்றி நினைவுண்டோ
கதி உன் கழலின் நிழலே அன்றே
வானகம் வையகம் தரும் இன்பங்களை
கருதியதும் உண்டோ!

இரங்குவதறிந்திலையா
மறந்திடலாகாதையா

இரவெலாம் கண்ணில் நீரருவி பெருகும்
அனலில் மெழுகென் அகமும் உருகும்
ஹரீ ஹரீ என நாவும் கதறும்
இதயமும் பதறும் ஐயா!

பாத மலரில் படிந்திடும் வண்டாய்
நாதனே உன் இசை பாடுவேன் கண்டாய்
அடியாள் மீரா அன்றும் இன்றுமுன்
அடைக்கலம் ஐயா!

மீராவும் பக்தர்களும்

அரங்கா உன் மகிமையை அறிந்தவர் யார்
அறிந்தவர் யார் எங்கும் நிறைந்தவனே (அரங்கா)

யானை அன்று ஆதிமூலமே என்று
ஓலமிடவும் ஓடி வந்தனையே
ஈனர்கள் சபையில் துரௌபதி கதற
மானம் காத்தனையே ஆஹா நீ (அரங்கா)

பிரஹலாதனையே பாலனம் செய்ய
நர ஹரியாய் வந்த நாரணனே
தாரணியில் உனை அன்றி வேறே
யார் துணை சங்க கதா தரனே (அரங்கா)

மீரா

மறைந்த கூண்டிலிருந்து—விடுதலை
பிறந்த பறவை விரைந்தோடுதே!
நிறைந்த வெளி நீலவானிலே—தன்னை
மறந்து இறைவன் அருள் பாடுதே!

(மடை) திறந்த வெள்ளம்போல் என்னுள்ளம்—கண்ணனின்
மலர்ந்த கருணைக் கழல் நாடுதே!
பிறந்த பயன் இன்றடைந்த மீராவின்—உயிர்
உவந்து ஆனந்தக்கடல் ஆடுதே!

பிருந்தாவனத்தில் கண்ணன் வளர்ந்த
அந்த நாளும் வந்திடாதோ?
நந்த குமாரன் விந்தை புரிந்த
அந்த நாளும் வந்திடாதோ?

அனைவரும் கூடி அவன் புகழ் பாடி
நிர்மல யமுனை நதியினில் ஆடி
வனம் வனம் திரிந்து வரதனைத் தேடி
அனுதினம் அமுதனைத் தரிசனம் செய்த (அந்தநாளும்)

Kanags

மானினம் நாணிடும் மங்கையரோடு
மாதவத்தோரும் மயங்கிடு மாறு
தேனின் இனித்திடும் தீங்குழல் ஊதி
மானிடர் தேவரின் மேலெனச் செய்தான் (அந்தநாளும்)

கானனம் சென்று ஆனிரை கன்று
கருணை மாமுகில் மேய்த்திட அன்று
புனிதன் மேனியில் புழுதியும் கண்டு
வானோர் பூமியை விழைந்தது முண்டு (அந்தநாளும்)

போதமிலா ஒரு பேதை மீரா
பிரபு கிரிதாரி இதய சஞ்சாரி
வேதம் வேதியர் விரிஞ்சனும் தேடும்
பாத மலர்கள் நோக நடந்த (அந்தநாளும்)

* * *

எங்கும் நிறைந்தாயே—இன்று
எங்கு மறைந்தாயோ
எங்கும் உனை நான் தேடி அலைந்தேனே
தயாளன் நீயே (எங்கும்)

மண்ணுலகிலும் வானோர் வாழ்
விண்ணுலகிலும் உனையல்லாமல்
கண்ணும் மனமும் எதையும் நாடாதே
பிரபோ முராரே (எங்கும்)

ஜனார்த்தன ஜகன்னாதா
நீ என் நாதன் அன்றே!

ஸுரா ஸுரர் பணிபாதா அருள் தராத காரணமேதோ
தாள்மலர் விடுவேனே தாமதம் இனி தாளேனே
கணனே நான் பட்டபாடு
கண்டு கல்லும் கரையும்
கடலில் குளித்தொரு முத்தெடுத்தேன்
கை நழுவ விடுவாயோ கருணையே புரிவாயோ
கருணையே புரிவாயோ—கதியிலேன் கிரிதாரி

துவாரகா புரிவாஸா! சோதனை போதாதோ!
தரிசனம் காணத் தடைசெய்யுங் கதவும் திறவாதோ!
மீரா உன் அடிமை என்பதும் திருவுள்ளம் மறந்ததோ!

சுபம்! சுபம்!

Kanags

When the Rana is away, Vikram instigates Uda to give poison to Meera. The poison has no effect on Meera. The Lord protects his devotee. Uda becomes repentant.

Mansingh and Thansen from the Akbar's court at Delhi, pay a visit to Meera's temple disguised as Sadhus. They hear the Music of Meera and present her with a pearl necklace.

The Rana is back from the hunt. Vikram and his lieutenant Jayamull weave a story around the necklace and make the Rana order the destruction of the temple.

Meera leaves Chitore for good with the thambura as her sole companion. She plods her way to Brindaban where she meets saint Rupagoswami and with him she goes to Dwaraka. Meera cries to the Lord to take her to His divine feet. The Lord of Dwaraka hears the call of His devotee.

Kanags